1990 ஏப்ரல் 16]

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையிலே கொண்டு வருகிற சீர்திருத்தம்—ஏற்கனவே, நெடுஞ்சாலைத் துறை மிக அதிகமான ரோடுகளை பராமரிக்கிற, மிகப் பெருத்த பணச்சுமையில் இருக்கிறது. இதிலே கிராமப்புறச் சாலைகளையும் இணைத்து விட்டால், கிராமப்புறச் சாலைகளுக்குக் கிடைக்கிற தனிக் கவனம் பாதிக்கப்பட்டுவிடும் என்ற கவலை இருக்கிறது. ஆகவே, தனித்து இயங்க வேண்டும் என்ற கோரிக்கையை, அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அவர்களுக்கு இப்போது இருக்கிற ஏரியாக்கள் குறைகிற போது கவனம் சரியாக இருக்கிறது. பரந்து விரிந்து இருப்பதை விட, குறிப்பிட்ட எல்லையை நிர்ணயித்து, இடத்தை குறைவாக்கினால், அதிக கவனம் ஏற்படும் என்றுதான் பொறியாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

சாலை அமைத்தல்

*2153 திரு. ஏ. சுப்பு: திரு. வீ. பெ. துரைசாமி:
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் கொல்லிமலை அரப்பளீஸ்வரர் கோவிலிலிருந்து ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிவரை சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அரசு ஆணை (நிலை) எண். 2314, சமூக நலத்துறை, நாள் 13—10—1984-ல் சேலம் கொல்லிமலை அரப்பளீஸ்வரர் கோயிலிலிருந்து ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி வரை சாலை அமைக்கும் பணிக்கு ரூபாய் 40.00 இலட்சத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலையின் நீளம் 7 கி.மீ. ஆகும். இதில் ரூபாய் 3.15 இலட்சங்கள் செலவழிக்கப்பட்டு, 280 மீட்டர் நீளத்திற்கு சாலை அமைக்கப்பட்டது. மீதிப் பகுதி காப்பு வனத்துறை பகுதியில் செல்கிறது. எனவே, காப்பு வனப் பகுதியில் சாலை அமைக்க மத்திய அரசின் ஒப்புதல் கோரப்பட்டது. மத்திய அரசு ஒப்புதல் அளிக்க மறுத்துவிட்டபடியால், மேற்படி சாலைப் பகுதியில் நடைபாதை தகுந்த நீள அகலங்களுடன் தீர்த்தமலை முதல் நீர்வீழ்ச்சி வரை அமைக்க ஏதுவாகும்

எனவும், மேற்படி நடைபாதை 33,000 பழங்குடியினருக்கு பயன்படும் எனவும் அரசு ஆணை (நிலை) எண். 105, சமூக நலத்துறை, நாள் 29—1—1988-ல் மேற்படி நடைபாதை அமைக்க ரூபாய் 11.00 இலட்சம் வனத்துறைக்கு ஒப்புதலளிக்கப் பட்டுள்ளது எனவும், இந்தப் பணியை நடப்பு நிதியாண்டில் செயல்படுத்துவதற்கு முதன்மை வனத்துறைத் தலைவர் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார் எனவும் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. வீ. பெ. துரைசாமி : (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் அமைந்திருக்கிற நீர்வீழ்ச்சி முனைக்கும், அதேபோல் அந்த மலையிலேயே அமைந்திருக்கிற அரப்பளீஸ் வரர் கோயில் இறைவனை வழிபடவும், திருச்சி மாவட்டம் துறையூர், உப்பிலியாபுரம் பகுதி வழியாகவும், சேலம் மாவட்டம் நாமக்கல் வழியாகவும், அதிக மக்கள், கொல்லிமலைக்குச் சென்று வருகிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் துவக்கப்பட்ட வல்வில் ஓரி விழாவில் அநேக மக்கள் கலந்துகொள்ளவும், காணவும், சென்று வருகிறார்கள். இதனையெல்லாம் மனதில் கொண்டு, அரப்பளீஸ் வரர் கோயிலுக்கும், அந்த நீர்வீழ்ச்சி முனைக்கும், சாலைகள் அமைக்க வேண்டிய முக்கியத்துவத்தைக் கருதி, மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்த, இந்த அரசு முன்னுரிமை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் உரையில் அளித் திருக்கிறேன். இது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்றும், மீண்டும் அவர்களிடமிருந்து சில தகவல்கள் கோரப் பட்டிருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அது கிடைத்ததும், மேற்கொண்டு பரிசீலித்து, தகுந்த ஆணைகள் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலூர் நகரத்திற்குக் குடிநீர்

*1737 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் ;

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூர் நகரத்திற்கு திருப்புவனம் வைகை ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?